**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI.**

**O.S. No.545/2025**

**P.W.1**

Deposition of Witness of P.W.1 Solemnly affirmed by of this Court on **26.02.2026** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பத்ரிநாத் | **Father Name** | : தியாகராஜன் |
| **Village** | : பங்கஜம் காலனி | **Taluk** | : மதுரை 625009 |
| **Calling** | : | **Age** | : 55 |

**வாதி தரப்பில் முதல் விசாரணை:**

நான் வழக்கில் வாதி நிறுவனத்தின் உரிமையாளர் ஆவேன். வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். 01.07.2017ம் தேதியில் வாதி நிறுவனத்திற்கு மத்திய அரசு வழங்கிய GST பதிவு சான்றிதழின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.08.2024ம் தேதியில் மத்திய அரசின் Udayam Registration சான்றிதழின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது ஆதார் அட்டையின் நோட்டரி நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.05.2022ம் தேதி முதல் 30.03.2022ம் தேதி வரை வாதி, பிரதிவாதிக்கு கொடுத்த இன்வாய்ஸின் மின்னஞ்சலின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பான் கார்டின் நோட்டரி நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.03.2022ம் தேதியில் வாதி நிறுவனத்திற்கு பிரதிவாதி அனுப்பிய மின்னஞ்சலின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16.03.2022ம் தேதியில் வாதி அனுப்பிய கோப்பிற்கு பிரதிவாதி அனுப்பிய மின்னஞ்சல் ஒப்புதல் கடிதத்தின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.06.2022ம் தேதியில் பிரதிவாதி சுற்றுச்சுவர் கட்டுமானத்திற்கு அனுப்பிய ஒப்புதல் கடிதத்தின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.05.2022ம் தேதியில் வாதி மின்னஞ்சல் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய கட்டிட வரைபடத்தின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.10.2022ம் தேதியில் வாதிக்கு பிரதிவாதி கூடுதல் கட்டுமானம் கட்டுவதற்கு அனுப்பிய மின்னஞ்சல் ஒப்புதலின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.01.2023ம் தேதியில் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய மின்னஞ்சல் கடிதத்தின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.02.2025ம் தேதியில் வாதியின் தணிக்கையாளர் 2ம் பிரதிவாதிக்கு GST செலுத்தக்கோரி அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.06.2025ம் தேதியில் வாதி, 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய நினைவூட்டல் கடிதத்தின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.20.08.2025ம் தேதியில் வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய நினைவூட்டல் கடிதத்தின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.08.2025ம் தேதியில் வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய ஒப்பந்தம் மீறல் சம்மந்தப்பட்ட அறிவிப்பின் இணையவழி தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.09.2025ம் தேதியில் வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய

வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.09.2025ம் தேதியில் 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.09.2025ம் தேதியில் 1ம் பிரதிவாதி முகவரி மாற்றத்தால் திருப்பப்பட்ட அறிவிப்பு கவர் **வா.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.15.09.2025ம் தேதியில் 1ம் பிரதிவாதியின் தற்போதைய முகவரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.09.2025ம் தேதியில் 1ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.02.2025ம் தேதிய வாதி, பிரதிவாதிக்கு கொடுத்த பாக்கியுள்ள வேலைகளுக்கான அட்டவணை என்னுடைய கணினியில் இருந்து தரவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.26 14:55:58 +0530